Date:13.10.2023

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)**

**விழுப்புரம்**

OS.27/2018

**வா.சா.2**

**<u>பெயர்-</u>** திரு.கோபி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

19.01.2016 தேதியில் நான் ஐயப்பனுக்கும், பாலமுருகனுக்கும் ஒரு பாகபிரிவினை உடன்படிக்கை பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் அதில் வாதி சான்றாவணம் 9 தானசெட்டில்மெண்ட் படி எங்கள் மூவருக்கும் எங்களது தகப்பனார் எழுதி கொடுத்த 72 சென்ட் நிலத்தை பிரித்து கொள்வதாக ஒப்பு கொண்டேனா என்றால் ஒப்புகொண்டேன். ஆனால் அதன்படி வந்து பாக பிரிவினை செய்ய அவர்கள் வரவில்லை. அதுபோல பாக்கியலட்சுமி வகையறா எனது தகப்பனார் ஆதிமூலத்திற்கு 1 ஏக்கர் 99 1/2 சென்ட் நிலத்தை பொருத்து பி.வா.சா.ஆ.3ன் படி எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரப்படி உள்ள நிலத்தை நாங்கள் 3 பேரும் பிரித்து கொள்வதாக ஒப்புகொண்டோமா என்றால் இல்லை. 3 வருடம் அக்ரிமென்ட் போட்டது உண்மை. ஆனால் அதன்படி அவர்கள் பணம் கட்டவில்லை. அதனால் நான் 8 வருடம் கழித்து தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கி விட்டேன். இந்த பி.வா.சா.ஆ 4 சான்றாவணம் படி நாங்கள் மூன்று பேரும் எங்கள் தகப்பனாருக்கு மேற்படி 1 ஏக்கர் 99 1/2 சென்ட் நிலத்தை ரூ.1,05000 க்கு கிரயம் பேசி அதில் 1 லட்சம் அட்வான்சாக கொடுத்தது போக ரூ.5000 3 வருடத்திற்குள் செலுத்தி கிரயம் பெற்றுக்கொள்ளவேண்டியது என்று கண்டுள்ளது என்றால் மொத்தம் 6 1/2 ஏக்கர் நிலம் பேசினோம் அதில் 4 ஏக்கர் 67 சென்ட் நிலத்தை நாங்கள் மூவரும் கூட்டாக வாங்கி பதிவு செய்தோம். அதில் 1 ஏக்கர் 99 1/2 சென்ட் தனியாக ஒதுக்கப்பட்டு விட்டது. பி.வா.சா.ஆ.4 கிரய உடன்படிக்கை 1 ஏக்கர் 99 1/2 சென்ட் நிலம் குறித்து தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதுபோல பி.வா.சா.ஆ.8,9,10 சான்றாவணங்கள் முறையே ஆவண எண்கள் 1338/2005, 2610/2006 மற்றும் 2609/2006 படி எங்கள் பெயரில் பெறப்பட்ட சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ள நாங்கள் ஒப்புக்கொண்டோம். வா.சா.9., பி.வா.சா. 3, பி.வா.சா.8 முதல் 10 ஆவணங்களில் கண்ட

சொத்துக்களை நாங்கள் மூவரும் சரிபாகமாக பிரித்துக்கொள்ள சம்மதித்தோம் என்றால் சரிதான். இந்த கோவிந்தம்மாள் நகரில் மனை எண் 17,18 நடுவில் உள்ள மனையினை வீரமுத்து அவர்களுக்கு 15.09.2010 கிரயப்பத்திரப்படி ரூ.1,25,000/ற்கு கிரயம் கொடுத்தேன் என்றால் நான் பவர் ஏஜென்ட் என்ற முறையில் பவர் வாங்கிய சொத்தை கிரயம் கொடுத்தேன். அதில் அண்ணாதுரை என்பவருக்கு வீடு கட்டி கொடுப்பதற்காக பவர் வாங்கி கொடுத்தேன். அந்த கிரயப்பத்திரத்தின் இணையவழி சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.13 ஆகும். அதுபோல 15.12.2010ல் பானுமதி என்பவருக்கு ஒரு கிரயபத்திரமும், 28.10.2010ல் என் சகோதரி கற்பகத்திற்கு ஒரு கிரய உடன்படிக்கையும், 09.06.2010 ல் கஜலட்சுமி என்பவருக்கு ஒரு கிரய ஆவணமும் 06.07.2010 ல் பாக்கியம் என்பவருக்கு ஒரு கிரய ஆவணமும், 14.07.2010 ல் பச்சையம்மாள் என்பவருக்கு ஒரு கிரய ஆவணமும், 14.09.2010 ல் லதா என்பவருக்கு ஒரு கிரய ஆவணமும், 28.10.2010 ல் எனது சகோதரி கற்பகத்திற்கு ஒரு கிரய உடன்படிக்கை பத்திரமும் நான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் முறையே பி.வா.சா.ஆ.14 முதல் 20 ஆகும். இந்த பாகவழக்கில் வா.சா.ஆ.1 முதல் 3 ல் கண்ட 9 ஏக்கர் 33 செண்ட் நிலமும், வா.சா.ஆ.4ல் கண்ட 8 ஏக்கர் 56 செண்ட் நிலமும், பி.வா.சா.ஆ.4 உடன்படிக்கையில் கண்ட 1 ஏக்கர் 99 1/2 செண்ட் நிலமும், கோவிந்தம்மாள் நகரில் நிலுவையில் உள்ள 6 மனைகளும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் வா.சா.ஆ. 9ல் கண்ட 72 செண்ட் நிலமும், வா.சா.ஆ.6,7 பி.வா.சா.ஆ.8,9,10 ஆகிய ஆவணங்களின் படி என்பேரிலும், ஐயப்பன், பாலமுருகன் ஆகிய 3 பேர் பேரிலும் மற்றும் ஐயப்பன், பாலமுருகன் பேரிலுள்ள சொத்துக்கள் பொருத்து பாகவழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கு அனைத்து சொத்துக்களையும் சேர்க்கப்படாததாலும் தகப்பனார் மற்றும் சகோதரிகளுக்கு உரிய பாகத்தினை கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படாததாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தவறான வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.